DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | DVC No.02/2020 |
| Deposition of witness | : | PW-1 |
| Name | : | இலக்கியா |
| Father's /Husband Name | : | தமிழ்செல்வன் |
| Village | : | திருவாஞ்சியம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 34 |
| Occupation | : | இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 06st day June 2024.
Respondent R4 Exparte. Respondents R1 to R3 Present. R5 absent petition U/sec. 317 Cr.P.C filed and allowed.

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நானும், எதிர்மனுதாரர்களும் தற்பொழுதும், முன்பும் ஒரே தெருவில் வசித்துவருகிறோம் என்றால் சரிதான். எனது திருமணம் காதல் திருமணம் என்றால் சரிதான். எனது முதல் குழந்தை சிஷ்டிகா பிறந்த தினம் என்னவென்றால் 19.02.2015 ஆகும். எனது திருமண தேதி என்னவென்றால் 09.10.2014 ஆகும். எனக்கு திருமணம் எங்கு நடந்தது என்றால் மாப்பிள்ளை குப்பம் மாரியம்மன் கோவிலில் திருமணம் நடந்தது, அதற்கான ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் மாப்பிள்ளை குப்பம் மாரியம்மன் கோவிலில் திருமணம் நடந்ததாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு இந்துமுறைப்படி திருமணம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் திருமணத்திற்கு முன்பு என்ன படித்திருந்தேன் என்றால் M.Phil, படித்திருந்தேன். நான் அந்த அளவிற்கு படித்திருக்கவில்லை என்றாலும், 1-ம் எதிர்மனுதாரர் தான் செலவு செய்து படிக்கவைத்தார் என்றால் சரியல்ல. நான் திருமணத்திற்கு முன்பே கற்பமானேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு முன்பே எனது முதல் குழந்தை கற்பமாக இருந்தார் என்றால் சரியல்ல. நான் சீர்வரிசை பொருட்கள் எதுவும் கொண்டுவரவில்லை என்றால் சரியல்ல. 5-ம் எதிர்மனுதாரருடன் 1-ம் எதிர்மனுதாரர் தொடர்பில் இருப்பதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஒரு போட்டாவை தாக்கல் செய்துள்ளேன். 1-ம் எதிர்மனுதாரருக்கும், 4-ம் எதிர்மனுதாரருக்கும் ஆண்குழந்தை பிறந்ததாக சொல்லியுள்ள நிலையில், அதற்கான பிறப்பு சான்று ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது கணவர் 1-ம் எதிர்மனுதாரர் என்ன பணி செய்கிறார் என்றால் லாரியை சொந்தமாக வைத்து தொழில் செய்து வருகிறார். அந்த லாரியை கடனாக பெற்று தான் ஓட்டி வருகிறார்

என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்களுக்கு வீடு உள்ளதாக கூறியுள்ள நிலையில், அந்த வீட்டின் பெயரில் கடன் உள்ளது என்றால் சரியல்ல. 2-வது குழந்தை எப்பொழுது பிறந்தது என்றால் 15.07.2019-ம் தேதி பிறந்தது. முதல் குழந்தைக்கும், 2-வது குழந்தைக்கும் எத்தனை ஆண்டு இடைவெளி என்றால் சுமார் 4 வருடங்கள் இடைவெளி ஆகும். எனது கணவருடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் இரண்டு நபர்கள். எனது கணவரின் சகோதரியை திருமணம் செய்வதற்காக பெரிய தொகையை அவர் கடன் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. எனது கணவரின் சகோதரர் ஒரே வீட்டில் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது கணவரின் சகோதரரும், 3-ம் எதிர்மனுதாரர் வீட்டில் தான் குடியிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பிறகு ஒரு ஆண்டு எனது கணவருடன் சேர்ந்து வாழ்ந்தேன். அதன் பிறகு ஏன் பிரிந்தேன் என்றால் 4-ம் எதிர்மனுதாரருடன் அவர் தொடர்பில் இருந்ததால் பிரிந்தேன். 4-ம் எதிர்மனுதாரருடன் தொடர்பில் இருந்ததாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பிறகு நான் நல்ல உறவு முறையில் எதிர்மனுதாரர்களுடன் இல்லை என்றால் சரியல்ல. நான் தற்பொழுது முனைவர் பட்டம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் தற்பொழுது இல்லத்தரசியாக உள்ளேன். நான் தற்பொழுது தனியார் பள்ளியில் பணி செய்து மாதம் இருபதாயிரம் பெற்றுவருவதை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை பராமரித்துக்கொள்ளும் அளவிற்கு எனக்கு போதிய வருமானம் வருகிறது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

(ஒம். M.S. பாரதிதாசன் M.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.